இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (6.8.2023) சென்னை, ஆளுநர் மாளிகையில் உள்ள தர்பார் ஹால், பாரதியார் மண்டபம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அம்மண்டபத்தையும், மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவப் படத்தையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

டெல்லியில் அதிகரிக்கும் தொற்றுநோய்!

புதுடெல்லி,ஆக.8- பருவமழை தொடர்பான தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு அதிக அளவிலான நோயாளிகள் மருத்துவமனைக்கு வருவதாக டெல்லி மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் சுகாதாரத்தைப் பேண வேண்டும் எனவும், மருந்து, மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையின்றி சாப்பிட வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

சென்னை, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பாரதியார் மண்டபம் மற்றும் மகாகவி பாரதியார் திருவுருவப் படத் திறப்பு விழாவிற்கு வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு நேற்று முன்தினம் (6.8.2023) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார்.

வெள்ளகோவில் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

ரூ 1.14 கோடி மதிப்பீட்டிலான 28 புதிய திட்டப்பணிகள்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஆக. 8 - தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் ஊராட்சி இராசாத்தவலசு பகுதியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.3.18 இலட்சம் மதிப்பீட்டில் இராசாத்தாவலசு ஆதிதிராவிடர் காலனி அத்தம்பாளையம்புதூர் ரோடு முதல் வீதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ரூ.5.61 இலட்சம் மதிப்பீட்டில் இராசாத்தாவலசு ஆதிதிராவிடர் காலனி காங்கேயம் சாலை செல்லும் வழியில் முதல் வீதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி,

ரூ.1.93 இலட்சம் மதிப்பீட்டில் இராசாத்தாவலசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆசிரியர்களுக்கான கழிப்பறை கட்டும் பணி, ரூ.1.89 இலட்சம் மதிப்பீட்டில் மாந்தபுரம் குக்கிராமத்தில் பொது மயானம் மேம்பாடு செய்யும் பணி, சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் மற்றும் ஆழகுழாய் அமைத்து கைப்பம்பு பொருத்தும் பணி, ரூ.1.93 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி துவக்கப்பள்ளியில் ஆசிரியர்களுக்கான கழிப்பறை கட்டும் பணி, ரூ.6.18 இலட்சம் மதிப்பீட்டில் மேட்டுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப்பப்பள்ளியில் மாணவிகளுக்கான கழிப்பறை கட்டும் பணி, ரூ.1.53 இலட்சம் மதிப்பீட்டில் நடுப்பாளையம் ஆதிதிராவிடர் காலனி கன்னியாத்தா கோவில் அருகில் செங்குத்து வடிகட்டி அமைக்கும் பணி, ரூ.1.53 இலட்சம் மதிப்பீட்டில் நடுப்பாளையம் ஆதிதிராவிடர் காலனி மயானம் அருகில் செங்குத்து வடிகட்டி அமைக்கும் பணி,

ரூ.1.53 இலட்சம் மதிப்பீட்டில் பாப்பம்பாளையம் ஆதிதிராவிடர் காலனி மயானம் அருகில் செங்குத்து வடிகட்டி அமைக்கும் பணி, ரூ.1.53 இலட்சம் மதிப்பீட்டில் வேப்பம்பாளையம் ஆதிதிராவிடர் காலனி மயானம் அருகில் செங்குத்து வடிகட்டி அமைக்கும் பணி, ரூ.9.85 இலட்சம் மதிப்பீட்டில் மேட்டுப்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையின் உற்பத்தி பொருட்கள் சேமிப்பு கிடங்கு, ரூ.6.12 இலட்சம் மதிப்பீட்டில் சடையப்பாநகர் மோளக்கவுண்டன்வலசு செல்லும் சாலை இரண்டாவது வீதியில் சிமெண்ட் கான்கிரீட் அய்யம்பாளையம் சாலை அமைக்கும் பணி, மேற்கு 3 வது வீதியில் ரூ.6.63 இலட்சம் மதிப்பீட்டில் சடையப்பாநகர் மோளக்கவுண்டன்வலசு செல்லும் சாலை, 3 வது வீதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ரூ.4.74 இலட்சம் மதிப்பீட்டில் சடையப்பாநகர் மோளக்கவுண்டன்வலசு செல்லும் சாலை முதல் வீதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ரூ.4.08 இலட்சம் மதிப்பீட்டில் சடையப்பாநகர் மோளக்கவுண்டன்வலசு செல்லும் சாலை வடக்கு முதல் வீதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ரூ.5.87 இலட்சம் மதிப்பீட்டில் சடையப்பாநகர் மோளக்கவுண்டன்வலசு செல்லும் சாலை,

வடக்கு 2 வது வீதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ரூ.2.40 இலட்சம் மதிப்பீட்டில் சடையப்பாநகர் மோளக்கவுண்டன்வலசு செல்லும் சாலை, வடக்கு 4 வது வீதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, வேலப்பநாயக்கன்வலசு பகுதியில் பார்வை கால்நடை கிளை நிலையத்தினை திறந்து வைத்தும், நாகம நாயக்கன்பட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.1.89 இலட்சம் மதிப்பீட்டில் தாசவ நாயக்கன்பட்டி மாகாளியம்மன் கோவில் அருகில் செங்குத்து உறிஞ்சிக்குழி அமைக்கும் பணி, ரூ.9.10 இலட்சம் மதிப்பீட்டில் நாகமநாயக்கன்பட்டி கதிரடிக்கும் களம் மற்றும் இருப்பறை கட்டும் பணி என ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலான 28 புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்.

முன்னதாக வெள்ளகோவில் ஒன்றியம், மேலப்பாளையம் ஊராட்சி, இராசாத்தாவலசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் மேலப்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் விண்ணப்பம் பதிவு மையத்தினை ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், வெள்ளகோவில் ஒன்றியக் கழக செயலாளர் கே.சந்திரசேகரன், நகர கழக செயலாளர் சபரி எஸ். முருகானந்தம், முத்தூர் பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராக வேநத்திரன், மகேஷ், உதவி பொறியாளர்கள் கிருஷ்ண மூர்த்தி, செந்தில், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.08.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக அவரின் நினனவிடத்தின் அருகாமையில் பேனா சின்னம் அமைப்பதற்கான தமிழக அரசின் முடிவை எதிர்த்து மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இரண்டு வழக்குகளிலும் தமிழக அரசின் சார்பாக மாநிலங்களவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் அவர்கள் ஆஜராகி வாதாடி வெற்றி பெற்றதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

மொராக்கோவில் மினி பஸ் கவிழ்ந்து விபத்து!

மொராக்கோ. ஆக.8- வட ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோ நாட்டில் உள்ள மத்திய மாகாணமான அஜிலாலில் மிக மோசமான சாலை விபத்து நடந்துள்ளது. இந்த விபத்தில், 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

அஜிலாலில் உள்ள டெம்னேட் நகரில் நடைபெற்ற வாராந்திர சந்தைக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற மினி பஸ் வளைவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை தொடங்கியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மொராக்கோ உள்பட பிற வட ஆப்பிரிக்க நாடுகளின் சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்நாட்டில் உள்ள பல ஏழை குடிமக்கள் கிராமப்புறங்களில் பயணம் செய்ய மினி பஸ்களைப் பயன்படுத்துகின்றனர்.

மொராக்கோவில் ஆண்டுதோறும் சராசரியாக 3,500 சாலை இறப்புகள் மற்றும் 12,000 காயங்கள் பதிவு செய்யப்படுகின்றன. தேசிய சாலை பாதுகாப்பு அமைப்பின்படி, சராசரியாக ஒரு நாளைக்கு 10 இறப்புகள் பதிவாகின்றன.

கோவை வடக்கு மாவட்டம் – கவுண்டம்பாளையம்

இடையர்பாளையம் - அண்ணாநகரில் இலவச கண் சிகிச்சை முகாம்!

அவைத் தலைவர் சோ.துரைப்பாண்டியன் ஏற்பாட்டில்!

கோவை, ஆக. 8- தமிழினத் தலைவராம், முத்தமிழ் அறிஞர் கலைஞரால் சீரிய முறையில் அறிமுகம் செய்யப்பட்ட, “கண்ணொளி திட்டம்” அவரது நூற்றாண்டினை ஒட்டி நல சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில்,14 ஆவது நிகழ்ச்சியாக, அரிய பல சாதனைகளைச் செய்து வரும் புகழ்பெற்ற அரவிந்த் கண் மருத்துவமனை டாக்டர்கள் மற்றும் செவிலியர்கள் ஊழியர்கள் 10 பேர் அடங்கிய குழுவினர் கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதி இடையர்பாளையம் அறிஞர் அண்ணா நகரில் உள்ள கம்பீர சித்தி விநாயகர் ஆலயத்தை ஒட்டி உள்ள சமுதாய கூடத்தில் (திருமண மண்டபம்) 5.8. 2023 அன்று காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை இலவச சிறப்பு கண் சிகிச்சை மருத்துவ முகாம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு எங்களுடன் இணைந்து மாவட்டத்தைச் சார்ந்த அரிமா எம். வீரான் குட்டி தலைமையிலான கிரீன் இட்றி மற்றும் அரிமா ஆர்.குமரேசன் தலைமையிலான அகிலம் அரிமா சங்கம் ஆகியவை பங்கேற்றன. ஏழை எளியோர் ஏராளமான மகளிர்கள் கண் சிகிச்சை முகாமில் பங்கேற்றனர்.

இலவச கண் சிகிச்சை முகாமின் சிறப்பு அம்சங்களான சர்க்கரை நோயாளிகளுக்கு கண் விழித்திரை சிறப்பு கண் மருத்துவரால் பரிசோதனை செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு FFA ..OCT. போன்ற பரிசோதனைகள் நவீன கருவிகள் மூலம் உடனடியாக செய்யப் பட்டதோடு இலவச லேசர் அறுவை சிகிச்சையும் ரூபாய் 50000 செலவாகக் கூடிய கண் நரம்பு அறுவை சிகிச்சையும், இலவசமாக செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன .

இந்நிகழ்வில் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை அமைப்பாளர் கா.பொன்னரசு மேற்பார்வையில், கழக கண்மணிகள் தோழமைக் கட்சியினர், அருகில் உள்ள நல சங்கங்களின் நிர்வாகிகள், அரிமா சங்கத்தினர், ரோட்டரி சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குறிப்பாக மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி ஆலிஸ் பிரசன்னா, கவுண்டம்பாளையம் பகுதிக் கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி, தொண்டரணி மோகன் குமார், காவல் ஆய்வாளர் (ஓய்வு) மதிவாணன், பரமேஸ்வரன், முரளி வர்த்தக அணியை சார்ந்த ரவி முரசு, ராம்குமார், முருகானந்தம், வரதராஜன் IFS. பேப்பர் கண்ணன், மூத்த முன்னோடி பி. ஜி. ராமதாஸ், ஜே.ஜே. நகர் அக்ரி குமரன், எஸ்.வி. நகர் புஷ்பா,

முன்னாள் வட்ட பிரதிநிதி ஆர்.கே. குமார், லட்சுமி நகர் வெங்கடேஷ், சி.பி.எம். வட்டச் செயலாளர் தாமோதரன், ஆனந்தகுமார், அரிமா கேபினட் செகரட்டரி பூமிநாதன், காலபைரவர் கோயில் கமிட்டி கண்ணன், விநாயகர் கோவில் கமிட்டி பாலன், அன்பு நகர் நலச்சங்க நிர்வாகி ஜான், சுரேஷ், மாசாணி அம்மன் நகர் ஆரோ வாட்டர் சாமி,

காந்தி நகர் வெற்றிச் செல்வன், லேப் சிவகுமார், லயன் சந்திரலிங்கம், மார்க்கெட் தயானந்தன், மகளிர் அணி கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களாக அரிமா மாவட்ட ஆளுநர் லயன் மோகன் குமார், கவுண்டம்பாளையம் காவல் ஆய்வாளர் ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.. அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து, சோ. துரைப்பாண்டியன் செயல்பட்டார்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.22/2023–2024/வ1/நாள்–04.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **திருநெல்வேலி (நெ), க(ம)ப கோட்டம்** சார்ந்த **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 (2 வேலைகள்) திட்டப்பணிக்கு** இணையவழியில் மட்டுமே **இரு உறை முறையில்** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **30.08.2023–14.00 மணிவரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **14.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4336/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
க(ம)ப வட்டம், திருநெல்வேலி

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவரின் வழிகாட்டுதலின்படி, தருமபுரி மேற்கு மாவட்ட திமுக கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 100 நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் ”கலைஞரும் “கலைத்துறையும்” என்கின்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கு கூட்டத்தில் மாநில கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவரும் திரைப்பட நடிகருமான வாகை.சந்திரசேகர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் சாதனைகள் மற்றும் கலைத்துறை சேவைகளை, எடுத்துரைத்து சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் அவைத்தலைவர் கே.மனோகரன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட 1000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சிங்கை சா.பழனிவேலு
ஆகஸ்ட் 8 (2020)

சிறு வயதிலேயே கழக கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது கீழத்திருப்பாலக்குடி கிராமத்தில், முன்னோடிகளை வைத்து முதன்முதலாக கழகக் கொடியேற்றி, கிளைக் கழகத்தை தொடங்கிய காரணத்தால், ஊர் பெரியவர்கள் ஒன்றுகூடி புளியங்குச்சியால் இவரை அடித்தனர்.

இளம்வயதில் சிங்கப்பூரில் தொழில் புரிந்திட சென்ற காரணத்தால், திராவிட இயக்க தலைவர்களை சிங்கப்பூர் அழைத்து, அங்கு கொள்கைப் பிரச்சாரம் செய்திட வழி செய்ததோடு, ‘தமிழ் முரசு’ ஏடு நடத்தி, தமிழ்மொழியை வளர்த்தவர்.

கழகத் தலைவர் அவர்கள், “தமிழைக் காக்கும் உணர்வுகளுக்கு வழிகாட்டியாக, இவர் போன்ற இலட்சக்கணக்கானோர் இருக்கும் இயக்கம்தான் தி.மு.க.” என இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.